சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

41

81. பூக்கொய்து நீராடப் போகிறார்கள்

சோலையில் பல இடங்களிலும் திரிந்து ஆடவர்களும் பெண்களும் பூப்பறித்துக் கொண்டிருக்கும்போது, ஒருவன் மன மளவென்று புன்னை மரத்தின்மீது ஏறி விட்டான். அப்போது அவன் மனைவி என்ன செய்தாள், தெரியுமா? அதற்கும் மேல் ஏறிவிட்டாளாம். ஏன்? எப்படி?

நாறு பூங்குழல்
நன்னுதல், புன்னைமேல்
ஏறி னான்மனத்(து)
உம்பர்சென்(று) ஏறினாள்

27 199

[நாறு — மணம் வீசுகிற. பூங்குழல் — பூக்களோடு கூடிய அழகிய கூந்தல். நன்னுதல் — அழகிய நெற்றியை உடைய பெண். மனத்து உம்பர் — மனத்தின்மேல்.]

என்று காட்டுகிறான் கவிஞன்.

அவள் மரத்தடியில் கீழேதான் இருக்கிறாள். இருந்த போதிலும், அந்த மரத்தின் மேல் ஏறினவனின் மனத்தின்மேல் ஏறி வீற்றிருக்கிறாளாம். அந்த ஆடவன் அவளிடமுள்ள காதலால் அவளுக்காக மலர் பறிக்க வேண்டுமென்று புன்னைமேல் ஏறினான். ஏறினவன், "பூக்களை அவளுக்குச் சூட்ட வேணும், அல்லது அவள் அடிகளில் இட வேணும்; பறித்துப் போட்டால் போதாது, கையில் கொடுத்தால் போதாது" என்றெல்லாம் மனோ ராஜ்யம் செய்கிறான் என்பது குறிப்பு. இக் குறிப்பைச் சாதுரியமாக வெளியிடுகின்றன இச்செய்யுளடிகள்.

* * *

வேறொருவன் ஒரு பூமரக் கிளையின்மேல் காணப்படுகிறான். அவனும் தன் காதலிக்காக மலர் கொய்ய ஏறினவன்தான். கீழே யிருக்கும் அவளைப் பார்த்துக் கொண்டே பூக் கொய்கிறான். ஆனால், பூக்களைக் கொய்யவே யில்லை என்கிறான் கவிஞன்! அந்த அதிசயத்தையும் இதோ பாருங்கள்:

சினையின் மேலிருந்
தான், உருத் தேவரால்
வனைய வும்அரி
யாள்வனப் பின்தலை
நினைவும் நோக்கமும்
நீக்கலன், கைகளால்
நனையும் நாள்மறி
யும்கொய்து நல்கினான்.

27

[சுனை — பூக்கினை. உரு — உருவம். வனையவும் அறியான் — எழுதவும் முடியாதவன். வனப்பின் தலை — அழகிலேயே. நோக்கம் — பார்வை. கனை — பூ அரும்பு. கான்முறி — கான்பட்ட தளிர். நல்குனன் — கொடுத்தான்.].

தெய்வச் சிற்பிகளாலும் அந்த உருவத்தை வனையமுடியாது, சித்திரிக்க முடியாது!— என்று அவன் நினைக்கும்படி அப்பேர்ப்பட்ட கட்டழகி அவள், அவன் கண்களிலே. அந்தக் காதலி பூப் பறிக்க எண்ணிய அவன் கண்ணையும் பறிக்கிறாள்; அந்தக் கருத்தையும் பறித்துக் கொள்ளுகிறாள். அந்த நிலையில் அவளையே பார்த்துக் கொண்டு பூப்பறிக்கத் தொடங்குகிறவன், பூவுக்குப்பதில் அரும்புகளையும் கான்பட்ட தளிர்களையும் பறித்துப் பறித்துப் போடுகிறான். அவளும், பூக்களை வாங்கிக்கொள்ள நீட்டிய தன் கைகளால் அந்த அரும்புகளையும் இலைகளையும் வாங்கிக் கொள்ளுகிறாளாம். அவன் தான் பறித்துப் போடுபவை 'பூவா, இல்லையா?' என்று பார்க்கவில்லை; அவளும்தான் பார்க்கவில்லை! சரியான ஜோடி: இல்லையா?

• • •

பூப்பறிக்க வந்தவர்கள் அந்த முயற்சியை அறவே மறந்து தடுமாறும் ஒரு காட்சியையும் பார்க்கலாம். ஒருவன் தன் மனைவியின் முகத்தை நோக்கியதும் தடுமாறுகிறான்; வந்த காரியத்தை மறந்து விடுகிறான். ஏன்? அவளுக்குத் தன்மேல் கோபம் என்று தெரிந்து விடுகிறதாம். எப்படி? அந்தக் கோபத்தைத் தீர்க்கவும் வழி தேடவில்லையா?

வண்டு வாழ்குழ
　　லாள்முகம் நோக்கி, ஓர்
தண்டு போல்புயத்
　　தான்தடு மாறினன்,
உண்டு கோபமென்(று)
　　உள்ளத்(து) உணர்ந்(து)அவள்
தொண்டை வாயில்
　　துடிப்போன்று சொல்லவே!

[குழலாள் — கூந்தல் உடையவள். தண்டு — தண்டாயுதம். புயம் — புஜம். தொண்டை வாய் — ஒருவகைக் கனிபோல் சிவந்த வாய்.]
என்று அந்தக் காட்சியையும் தெளிவாய்ப் பார்க்கிறோம்.

பூச் சூடிய அந்தக் கூந்தலைப் பார்த்து ஆசையோடு முகத்தையும் பார்க்கிறான் அந்த வீரன். செங்கனி போன்ற வாய் துடிப்பதைக் கண்டு, "ஐயோ, கோபமா?" என்று துடிக்கிறான், தடுமாறுகிறான். கோபத்திற்குக் காரணமும் தெரியவில்லை, கோபம் தீர்க்க வழியும் தெரியவில்லையாம். இந்த நிலையில் பூக் கொய்ய வந்தோம் என்பதையே அவர்கள் மறந்து விட்டது ஓர் அதிசயமா?

• • •

பூக் கொய்து விளையாடியவர்கள் — சமாதானமாகவும் குட்டிக் கலகங்கள் செய்தும் விளையாடிக் கொண்டிருந்தவர்கள் — நீண்ட நேரமான பிறகு, அந்தச் சோலையிலும் குளிர்ந்த நிழலிலும் அந்த விளையாட்டிலும் வெறுப்புக் கொண்டார்கள். பூக் கொய் விளையாட்டிலிருந்து அவர்கள் உள்ளம் நீர்விளையாட்டை நாடியது.

யும் தன்மையர்
இவ்வகை யார்எலாம்,
ய தண்ணிழல்
சோலைத் துறுமலர்
வெயும் செய்கை
வெறுத்தனர், வெண்திரை
யும் தீம்புனல்
பண்ணை சென்(று) எய்தினர்.

[யும் — இசையும். இவ்வகை யார் — இப்படிப்பட்ட ஆண்களும் பெண்களும். எலாம் — எல்லாம். ய — பரிசுத்தமான. தண் — குளிர்ந்த. துறு — நெருங்கிய. வெயும் — சுடுகிற. திரை — அலைகள். தீம்புனல் — இனிய நீர். பண்ணை—(இங்கே) விளையாட்டு.]



பூஞ்சோலையிலிருந்து ஆடவரும் பெண்களும் பூக்களோடு கூடிய நீர்நிலையை நோக்கி வரும் அந்தக் காட்சியே ஒரு தனி அழகு.

புனைமலர்த் தடங்கள் நோக்கிப்,
பூசல்வண்(டு) ஆர்த்துப் பொங்க,
வினையறு துறக்க நாட்டு
விண்ணவர் கணமும் நாண,
அனகரும் அணங்க னாரும்
அம்மலர்ச் சோலை நின்று,
வனகரி பிடிக ளோடு
வருவன என்ன,
வந்தார்.



[புனை — அலங்கரிக்கின்ற. தடங்கள் — குளங்கள். பூசல் — ஆரவாரம். ஆர்த்து — ஒலித்து. வினையறு — தீவினை அற்ற. துறக்க நாடு — சுவர்க்கலோகம். விண்ணவர் கணம் — தேவர் கூட்டம். அனகர் — குற்றமற்ற ஆடவர்கள். அணங்கனார் — தெய்வப் பெண்களை ஒத்த பெண்கள். வன கரி—காட்டில் வாழும் ஆண் யானைகள். பிடிகள்— பெண் யானைகள்.]

கவலையில்லாமல் அவ்வளவு குதூகலமாக வருகிற அவர்களுடைய மனநிலையும் அழகும், தேவ போகத்தில் இருப்பவர்களையும் வெட்கம்

அடையச் செய்கின்றனவாம். அவர்கள் நீர்நிலையில் பிரவேசித்ததும் அச் விசையால், பூக்களில் மொய்த்திருந்த வண்டுகள் ஆரவாரித்துப் பொங் கின்றன. அந்த நீர்நிலையின் அழகுக்கும் அழகு செய்கிறது அவர்க வருகை என்பது குறிப்பு.

* * *

மாதர்கள் நீரில் இறங்கியதும், அங்கேயுள்ள நீல மலர்களும் தாமை மலர்களும் அவர்களின் கண்களோடும் முகங்களோடும் சேர்ந்து அழ பெற்ற அந்த வைபவத்தைக் கவிஞன் பின் வருமாறு வர்ணிக்கிறான்:

மையவாம் குவளை எல்லாம்
  மாதர்கண் மலர்கள் பூத்த,
கையவாம் உருவத் தார்தம்
  கண்மலர் குவளை பூத்த;
301 செய்யதா மரைகள் எல்லாம்
  தெரிவையர் முகங்கள் பூத்த,
தையலார் முகங்கள் செய்ய
  தாமரை பூத்த அன்றே.

[மைஅவாம் — கருமை பொருந்திய. குவளை — ஒரு வகை நீ மலர். கைஅவாம் — ஒழுங்காகவுள்ள. செய்ய தாமரை — செந்தாமரை தெரிவையர் — பெண்கள். தையலார் — பெண்கள்.]

கருநீலக் குவளை மலர்களைப் பார்த்தால், "இவையெல்லாம் அந்தப் பெண்களின் கண் மலர்கள் போலப் பூத் திருக்கின்றன" என்ற சொல்லத் தோன்ற கிறதாம். அந்தக் கண் களைப் பார்த்தாலோ, "இந்தக் குவளை மல களைப்போல் மலர்ந்த விளங்குகின்றன" என்று சொல்லத் தோன்றுகிறதாம். இ படிச் செந்தாமல மலர்களும் பெண்களு டைய முகங்களும் கலந்து அபேதமா உறவாடும் அதிசய தை என்னென்பது

* * *

இந்தப் பீடி யோடு நீர்விளையாட் ஆரம்பமாகிறது.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

82. நீர்விளையாட்டுக் காட்சிகள்

சில பெண்கள் தம் காதலர்களைத் தழுவி நிற்கையில், மகாலக்ஷ்மி போலக் காண்கிறார்களாம். வேறு சிலர் கணவர் தோளைப் பற்றி நிற்கும் போது, அந்த நீர்நிலையிலே விஜய லக்ஷ்மியை (வெற்றித் திரு) ஞாபகப் படுத்துகிறார்களாம், இன்னும் சிலர்; ஒருவர் மீது ஒருவர் தண்ணீரை வீசுகிறார்கள், பீச்சாங்குழல் போன்ற ஒருவகைக் கருவியால். சிலர் பெரிய மீன்கள் துள்ளுவதைக் கண்டு, அதையே வியாஜமாகக் கொண்டு அஞ்சுவது போல், தம் கணவரைத் தழுவிக்கொள்கிறார்கள். சிலர் பரிமளத் தூளையும், வாசனையுள்ள தைலங்களையுங் கூட, ஒருவர் மீது ஒருவர் தூவி விளையாடுகிறார்கள். பூமாலைகளையும் ஒருவர்மீது ஒருவர் வீசுகிறார்கள்.

இப்படி யெல்லாம் விளையாடுகிறவர்களுக்கிடையே,

மின்னொத்த இடையி னாரும்,
வேயொத்த தோளி னாரும்,
சின்னத்தின் அளக பந்தி
திருமுக(ம்) மறைப்ப நீக்கி,
அன்னத்தை "வருதி என்னோ(டு)
ஆட"(எ)ன்று (அ)ழைக்கின் றாரும்

[மின் — மின்னல். வேய் — இள மூங்கில். சின்னம் — விடு பூ. அளக பந்தி — தலைரோமத் தொகுதி. வருதி — வருவாயாக. ஆட — விளையாட.]

காணப்படுகிறார்கள்.

தண்ணீரில் மூழ்கிச் சில பெண்கள் எழுந்திருக்கையில், அந்த அழகிய முகங்களை விடுபூக்கள் சூடிய அளகம் மறைத்து விடுகிறது. அந்த அளக பந்தியை விலக்கிக் கொண்டு, அருகேயுள்ள ஓரன்னத்தைப் பார்த்து, "என்னோடு விளையாட வா, அம்மா!" என்று கொஞ்சி யழைக்கிறார்கள்.

* * *

அந்தத் தடாகத்தின் உட்புறத்திலே கயல்மீன்கள் உலவி உலவிப் பிறழ்கின்றன, பெண்களின் கண்கள் பிறழ்வது போலே. அதைக் கண்டு சில பெண்கள் தம் கணவரை நோக்கி, "தடாகங்களுக்கும் நம்மைப் போல் கண்கள் உண்டோ?" என்று கேட்கிறார்களாம்.

உ(ள்)நிறை கயலை நோக்கி,
"ஓடுநீர்த் தடங்கட் கெல்லாம்
கண்ணுள வாம்கொ(ல்)?" என்று
கணவரை வினவுவாரும்

[தடம் — தடாகம்.]

என்ற அடிகளில் வெளிப்படும் பேதைமையை என்னென்பது ? 'பேதை[illegible] என்பது மாதர்களுக்கு அணிகலம்' என்று சொல்வதுண்டு. அப்படியானு[illegible] பேதைமையை மாதர் சுபாவத்தின் பகுதியாகக் கருத வேண்டியதில்லை[illegible] அந்த அணிகலத்தை இப்போது இவர்கள் அணிந்து கொண்டது, கண[illegible] டம் குறும்புக் கேள்வி கேட்டுப் பொழுது போக்குவதற்காகத்தானே? [illegible] என்று ஊகிக்கலாம்.

* * *

சில பெண்கள் தங்கள் கணவர்களைத் தடாகத்தினிடையே கண்ட[illegible] அவர்களை நோக்கி, மயில்கள் வருவது போல வருகிறார்களாம். அப்போ[illegible] அவர்களுடைய ரத்தின ஆரங்கள் மின்னல் வீசுவதும், குண்டலங்கள் 'வி[illegible] வீசுவதும், "எந்த மயில்களுக்குத்தான் இந்த மயில்களின் அழகு உண்டு ?[illegible] என்று அந்தக் கணவர்களையே பிரமிக்கச் செய்து விடுகின்றன. அப்[illegible] வந்து கணவரைத் தழுவி வரவேற்க விரும்பும் அப் பெண்மணிகளை[illegible] பாருங்கள் :

குண்டலம் திருவில் வீசக்
குலமணி ஆரம் மின்ன,
விண்தொடர் வரையின் வைகும்
மென்மயில் கணங்கள் போல,
வண்(டு)உழல் கோதை மாதர்
மைந்தர்தம் வயிரத் திண்தோள்
தண்டுக(ள்) தழுவு(ம்) ஆசைப்
புனற்கரை சார்கின் றாரும்.

[திருவில் — அழகிய வில்லைப் போன்ற ஒளி. குலமணி — சிறந்[illegible] முத்து. விண் தொடர் வரை—வானை அளாவும் மலை. வைகும்—தங்கு[illegible] மென்மயில் — மெல்லிய மயில்களின் கூட்டம். வண்டுஉழல் கோதை —[illegible] வண்டு சுழல்வதற்குக் காரணமான பூமாலை. மைந்தர்—ஆடவர்; (இங்கே[illegible] கணவர். வயிரத் திண்தோள்—வயிரம்போல் உறுதியான தோள். தண்[illegible] —தண்டாயுதம். புனற்கரை—நீர்நிலையின் கரை.]
என்ற பாட்டிலே.

* * * *

தடாகத்தின் ஒரு பக்கத்தில் கூட்டத்தோடு கலந்து கொள்ளாம[illegible] ஒரு பெண்ணும், அவள் காதலனும் நீராடப் போகிறார்கள். நீர் விளையா[illegible] டுக்கு இடையே, அவளுடைய கண்கள் கோபத்தால் சிறிச் சிவந்த[illegible] அப்படி அவன் என்ன குற்றம் செய்து விட்டான்? "அது தான் நமக்[illegible] புரியவில்லை!" என்கிறான் கவிஞன். இந்த முன்னுரையோடு இ[illegible] விளையாட்டுக் காட்சியைக் காட்டுகிறான் :

அங்(கு)இடை உற்ற குற்றம்
யாவதுஎன்(று) அறிதல் தேற்றாம்;
செங்கயல் அனைய நாட்டம்
சிவப்புறச் சீறிப் போன
மங்கைஓர் கமலச் சூழல்
மறைந்தனள்; மறைய, மைந்தன்
பங்கயம் முகம்என்(று) ஓரான்,
ஐயுற்றுப் பார்க்கின்றானும்

[தேற்றாம்–தெளிய மாட்டோம். செங்கயல் அனைய நாட்டம்-கயல் மீனை ஒத்துச் செவ்வரி படர்ந்த கண்கள். கமலச் சூழல் - தாமரைக் கூட்டமுள்ள ஓரிடம். பங்கயம் - தாமரை. ஓரான் — ஆராய்ந்து பார்க்க முடியாதவனாய். ஐயுற்று - ஐயங் கொண்டு.]

"விளையாட்டு வினையாகி விட்டதே, அப்படி அவளைக் கோபமூட்டி விடவும் இல்லையே!" என்று அவன் பார்க்கும்போது, செந்தாமரைப் பூக்கள் காடாகப் பூத்திருந்த ஓரிடத்தில் அவள் மறைந்து கொண்டாள். தேடிப் போனவனோ, அந்த முகத்திற்கும் அந்தப் பூக்களுக்கும் வித்தியாசம் தெரியாமல் தயங்கித் தயங்கி நிற்கிறானும்.

நீராடும் துறையொன்றில் எத்தனையோ அழகிகளுக்கிடையே ஓரழகி பேரழகியாகக் காணப்படுகிறாள், அழகிய பூக்களுக்கிடையே சிவந்து விளங்கும் தாமரை போலே!



பாவைமார் பயந்த கோலப்
பண்ணையில் பொலிவாள், வண்ணப்
பூவெலாம் மலர்ந்த பொய்கைத்
தாமரை பொலிவ(து) ஒத்தாள்.

[பாவைமார்—(இங்கே) வண்ண மகளிர்; அலங்காரம் செய்யும் பணிப் பெண்கள். பயந்த—தந்த. கோலம்—அழகு. பண்ணை—பெண்களின் கூட்டம். வண்ணப் பூ—அழகான பூக்கள். பொய்கை—தடாகம்.]

பெண்கள் நீராடும்போது, உடம்பில் பூசிய கலவைச் சந்தனம் முழுதும் அழிய, அவர்களின் இயற்கைப் பேரழகு சாணை பிடித்த ரத்தினம் போல ஜொலிக்கிறதாம். அப்படி அவர்கள் உல்லாசமாக விளையாடிக் கொண்டு நீராடும் அழகைக் கவிஞன் வர்ணிக்கிறான்:

காக துண்ட
நறும்கல வைக்கனி
ஆகம் உண்ட(து)
305 அடங்கலும் நீங்கலால்,
பா(கு)அ டைந்த
பனிக்கனி வாய்ச்சியர்
வேக டம்செய்
மணியென மின்னினார்.

[காக துண்டம்—அகில். நறும் கலவைக் கனி—நறுமணமுள்ள கலவைச் சந்தனக் குழம்பு. அடங்கலும்—முழுதும். ஆகம்—உடம்பு. உண்டது—பூசியது. பாகு அடைந்த—தேம்பாகின் தன்மையுள்ள. பனிக் கனி வாய்ச்சியர்—குளிர்ந்த கனி ரஸத்தின் சுவையோடுகூடிய சொல்லை யுடைய பெண்கள். வேகடம்—சாணை.]

மாலையும் தோளுமாக விளங்கிய ஒரு வீரன் தண்ணீரைக் கையால் அள்ளித் தன் காதலியின் தலையிலே வீசுகிறான். அது எப்படி யிருக்கிறது தெரியுமா? யானை ஒன்று தன் தும்பிக்கையினால் நீரை மொண்டு லக்ஷ்மியை நீராட்டுவது போல் எழுதப் பட்டிருக்கும் கஜலக்ஷ்மி-படம் பார்த்திருக்கிறீர்களல்லவா? அப்படி யிருக்கிறதாம் அந்த ராஜகுல வீரன் நீரை முகந்து அந்தப் பெண்ணின் கூந்தலிலே சொரிவதும்:

தையலாளை ஓர்
தார்அணி தோளினான்,
நெய்கொள் ஓதியின்
நீர்முகந்(து) எற்றினான்,
306 செய்ய தாமரைச்
செல்வியைத் தீம்புனல்
கையில் ஆட்டும்
களிற்றர(சு) என்னவே.

[ஓர்—ஓர். தார்—மாலை. நெய் — எண்ணெய். ஓதி — கூந்தல். செய்ய—சிவந்த. செல்வி—லக்ஷ்மி. தீம்புனல்—இனிய நீர்..]

பூக்கொய்த பின் பெண்கள் தங்கள் கணவர்களுடன் தடாகத்தில் விளையாடும் காட்சிகளை வர்ணிக்கும் இந்தப் படலத்தைப் 'புனல் விளையாட்டுப் படலம்' என்கிறார்கள். தமிழ்க் காவிய மரபை ஒட்டியும், பாலகாண்டத்தின் செய்யுளைப் பெருக்குவதற்காகவும், கம்பன் இப் படலத்தைச் சேர்த்திருக்கிறான் என்று கருதலாம். இப் பாடல்களில் பலவும் ராமாயணம் பாடுவதற்கு முன்னாலேயே பாடப் பட்டிருக்கலாம். இவற்றுள் சில, அழகான பாடல்கள் என்பதை யாரும் மறக்க முடியாது.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

83. ரஸமான தோல்விகள்

ராஜகுமாரன் ஒருவனை — தசரத சக்ரவர்த்தியின் சிற்றரசர்களில் ஒருவனைத்தான் — ஒரு நீர்நிலையில் பார்க்கிறோம், அவனது காதலியுடன். அவர்கள் இப்போது நீராடிக் கொண்டிருக்க வில்லை, நீர் விளையாட்டில் ஈடுபட்டிருக்க வில்லை. ஏதோ பேசிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால், வாய்ப் பேச்சாக ஒன்றும் காதில் விழவில்லையே?

இது என்ன அதிசயம்? பார்க்கலாம்:

> தாழ நின்ற
> தகைமலர்க் கையினால்,
> ஆழி மன்ஒரு
> வன்உரைத் தா(ன்);அது
> வீழி யின்கனி
> வாய்ஒரு மெல்லியல்,
> தோழி கண்ணில்,
> கடைக்கணில், சொல்லினாள்.

[தகை — அடர்ந்த. ஆழிமன் — ஆக்ஞா சக்ரத்தையுடைய மன்னவன்; (இங்கே) சிற்றரசன்; வீழி — ஒருவகைக் கனி. மெல்லியல் — பெண். கடைக் கணில் — கடைக் கண்ணால்.]

அந்த ராஜ குமாரன் கைக் குறி காட்டுகிறான்; அதாவது, கை ஜாடையால் பேசுகிறான். சரி; தலைவி பதில் சொல்லுகிறாளா? கை ஜாடையாகக் கூடப் பதில் சொல்லவில்லை. 'அவளுடைய அந்தக் கனி போன்ற வாயிலிருந்து, ஒரு சொல் கிடைத்தாலும் போதுமே!' என்று தவிக்கிறவனைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. தோழியைத்தான் பார்க்கிறாள். அந்தப் பார்வையிலேயே ஒரு பேச்சு; அதுவும் கடைக் கண் பார்வைதான்.

தோழிக்கு அப்படி யென்ன தெரிவித்தாள்? தலைவி தெரிவித்ததைத் தோழி தலைவனுக்குத் தெரிவித்தாளா? அவன்தான் என்ன கருத்தை வெளியிட்டுக் கை ஜாடையால் வினவினான்? இதெல்லாம் நமக்கு ஒன்றும் தெரியாது. ஆனால், தோழி ஜாடையாகவும் சொல்லாமலே அவன் தெரிந்து கொண்டான். அந்தக் கோபத்தையோ, நாணத்தையோ தெரிந்து கொண்டான் — என்று ஊகிப்பது தவறாகாது. காதலனுக்குத் தோல்விதான், எனினும் ரஸமான தோல்வி யல்லவா?

இப்படி நீராடாமல் பொழுது போக்குகிறவர்களை விட்டு, இனி நீராடும் துறையையும், அங்கே "என்ன பாடு படும்! முழுக்காடும் அங்கே!"

என்ற ரீதியில் முழுக்காடுவதால் அலை தள்ளப்பட்டு ஓடிவந்து தடுமாறுவதையும் கவிஞன் காண்கிறான், காட்டுகிறான்.

அந்தத் தெளிந்த நீரில் பெண்கள் அமிழ்ந்து முழுகுவதால் சிற்றலைகள் அப்படி ஓடி மோதுவதும் மீள்வதுமாய்த் தடுமாறி, நீரில் மலர்ந்த செந்தாமரைப் பூவையும் முழுகச் செய்து விடுகின்றன. காரணம் யாரும் அறிந்ததே. எனினும் கவி பகுத்தறிவைக் கொண்டு பார்ப்பதோடு, கற்பனைக் கண்ணாலும் பார்த்து, பெண்கள் நீர்நிலையில் முழுகும்போது தாமரைப் பூக்களும் முழுகுவதற்கு வேறு காரணம் சொல்லுகிறான் :

தள்ளி ஓடி
    அலைதடு மாறலால்
தெள்ளு நீரில்
    முழுகுசெந் தாமரை,
305 புள்ளி மான்அனை
    யார்முகம் போல்கிலா(து),
உள்ளம் நாணி
    ஒளிப்பன போன்றவே!

[தெள்ளுநீர் — தெளிவாகவுள்ள நீர். புள்ளிமான் — புள்ளிகளையுடைய அழகான மான். அனையார் — ஒத்தவர்.]

நீராடும் பெண்களின் முகத் தாமரையைப் பார்த்த செந்தாமரைப் பெண்ணுக்கு நாணம் வந்துவிட்டதாம், “அந்த முகமலருக்கு நாம் ஈடோ? அந்த அழகுக்குத் தோற்றுவிட்டோமே!” என்று. அந்த நாணம்தான் அப்படி நீரில் ஒளிந்துக் கொள்ளும்படி செந்தாமரையைத் தூண்டியது போலும் — என்கிறான் கவிஞன். என்ன அழகு! என்ன நாணம்! என்ன தோல்வி! செந்தாமரைக்கும் அப்படி ஒரு உள்ளத்தையும், நாணத்தால் சிவந்த முகபாவத்தையும் கற்பிக்கும் மனோபாவமும், இந்தப் பாட்டின் ஓசையின்பமும், கவிதா ரூபமும் குறிப்பிடத் தக்கன.



நீர் விளையாட்டிலும் வெறுப்பு ஏற்படுகிறது. நீராடிக் கரையேறுகிறார்கள். இப்போது நீர்நிலை எப்படி இருக்கிறது? அவர்கள் என்ன செய்கிறார்கள்?

இனைய எய்தி
    இரும்புனல் ஆடிய
வனைக ருங்கழல்
    மைந்தரு(ம்)
        மாதரு(ம்),

அனைய நீர்வறி
தாகவந்(து) ஏறினர்,
புனைந ருந்துகில்
பூணொடும் தாங்கினர். 309

[இனைய—இப்படிப்பட்ட தன்மை. இரும்புனல்—(இங்கே) பெரிய நீர்நிலை. வனைகருங் கழல்—பூண்ட வீரக்கழல். மைந்தர்—ஆடவர். அனைய — அந்த நீர்நிலை. வறிதாக — வெளிச்சென்று தோன்றும்படி. புனைவருந்துகில் — அணியத் தக்க நல்ல ஆடைகள். பூண் — ஆபரணம்.]

இவர்கள் நீராடும்போது நீர்நிலைக்கே ஒரு புதிய அழகு, ஒரு புதிய வெற்றி தந்தவர்கள்; இப்போது கரையேறிவிட்டதால், அந்த அழகுச் செல்வத்தை நீர்நிலை இழந்துவிட்டது என்கிறான் கவிஞன்.

* * * * 46

அந்த நீர்நிலையின் வறுமையை, தோல்வியை மேலும் வற்புறுத்துகிறான் கவி:

மேவினர் பிரிந்தார்,
அந்த விங்குநீர்,
தாவு தண்மதி
தன்னொடும், தாரகை 310 284



ஒவு வானமும்,
உள்நிறை தாமரைப்
பூவெ லாம்குடி
போனதும் போன்றதே.

[மேவினர் — விரும்பி யடைந்தவர். வீங்குநீர் — மிகுந்த நீரைக் கொண்ட நீர்நிலை, தாவு—தவழ்ந்து செல்லும். தண்மதி — குளிர்ந்த சந்திரன். ஒவு — நீங்கப்பெற்ற.]

நீராடிய மாதரும் ஆடவரும் அந்த நீர்நிலைக்கே அலங்காரமாக இருந்தார்களாம். இப்போது அவர்கள் நீங்கியதால் சந்திரனும் நக்ஷத்திரங்களும் நீங்கிய வானம் போலிருக்கிறதாம் அந்த நீர்நிலை. அந்தத் தாமரைப் பொய்கையில், தாமரை மலர்கள் இன்னும் இருக்கத்தான் செய்கின்றன; அந்த நீர்நிலையை இன்னும் அலங்கரிக்கின்றன. எனினும் அந்தப் பெண்களோடும் அவர்களுடைய காதலர்களோடும், தாமரை மலர்களும் நீங்கிப் போய் விட்டனவோ?— என்று தோன்றுகிறது, இப்போது கவிஞன் கண்களுக்கு!

சூரியன் அஸ்தமனமாகிறது. மேற்குச் சமுத்திரத்தில் "தானும்

ோடவேணும், நீரில் விளையாட வேணும்" என்றுதான் சமுத்திர அலைகளுக்கிடையே மூழ்குகிறானும் :

மானின் நோக்கியர்
மைந்தரோ(டு) ஆடிய
ஆன நீர்விளை
யாடலை நோக்கினன்,
311 தானும் அன்னது
காதலித் தானென
மீன் வேலையை
வெய்யவன் எய்தினன்.

[மானின் நோக்கியர்—மானின் கண்போல் மருண்ட பார்வையுடைய பெண்கள். ஆன — ஆகிய. மீன்வேலை — மீன்கள் நிரம்பிய மேல் சமுத்திரம். வெய்யவன் — சூரியன்.]

சந்திரோதய மாகிறது. சந்திரனைப் பார்த்ததும், "பெண்களின் முக சந்திரனுக்குத் தோற்றுப் போனவனல்லவா?" என்ற ஞாபகம் வருகிறது கவிஞனுக்கு.

தோற்ற சந்திரன்
மீளவும் தோற்றினன்

என்றுதான் அந்தச் சந்திரோதயத்தை வருணிக்கத் தோன்றுகிறது. முந்தின நாள் சந்திரன் அஸ்தமித்தானல்லவா? பெண்களின் முகத்திற்குத் தோற்றுத்தான் அப்படி மறைந்து போனான் என்பது குறிப்பு. அப்படித் தோற்றவன் இன்று மீண்டும் வருவதற்குக் காரணம்தான் என்ன?

முதல் உலக மகா யுத்தத்திலே தோற்றுப் போன ஜெர்மனி மீண்டும் இரண்டாம் மகா யுத்தத்திலும் பிரிட்டனை எதிர்த்துப் பார்த்ததல்லவா? ஆசை யாரை விட்டது? அத்தகைய ஆசைதானும் சந்திரனுக்கும் :

312
ஆற்றல் இன்மையி
னால்அழிந் தேயும்,தம்
வேற்று மன்னர்தம்
மேல்வரும் வேந்தர்போல்,
ஏற்று மாதர்
முகங்களோ(டு) எங்கணும்
தோற்ற சந்திரன்
மீளவும் தோற்றினன்.

[ஆற்றல் — வலிமை. அழிந்தேயும் — தோற்றுப் போயிருந்தாலும். வேற்று மன்னர் — பகையரசர். ஏற்று — எதிர்த்து.]

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

84. நிலா விருந்து

நீடாகத்தில் நீராடிக் கரையேறி வந்தவர்கள் இப்போது ஆனந்தக் கடலாடினார்கள். அந்தக் கடலிலே மூழ்கிப் போனார்கள் என்றே சொல்லலாம். ஆம்; அந்தப் பெண்கள் இப்போது தங்கள் காதலருடன் சந்திரோதயம் காண்கிறார்கள்.

முதல் முதல் மலைக் காட்சிகளைக் கண்டு இன்புற்றார்கள்; பிறகு, சோலைகளிலே பூக்கொய்து விளையாடினார்கள்; நீர்விளையாடி மகிழ்ந்தார்கள். இச் சேனை வீரர்களின் உத்ஸாகம் மேலும் மேலும் அதிகரிக்கிறது, எதிர் நோக்கிய சீதா கல்யாணத்தை நினைத்துப் பார்த்ததும். கல்யாண விருந்தை எதிர்பார்த்து, இப்போதே ஒரு நிலாவிருந்து நடத்திவிட உத்தேசிக்கிறார்கள். இந்த விருந்திலே, தண்ணீர் பட்ட பாடு படுகிறது கள்!— என்றால் போதாது, வெள்ளம் பட்ட பாடு என்றே சொல்லலாம்.

* * * *

இத்தகைய விருந்து நடத்தி இன்பம் அனுபவிக்கப் போகிறவர்கள் அந்த வசீகரமான சந்திரிகையை எப்படி அனுபவித்திருப்பார்கள்? விருந்தினர்களின் கண்ணைக் கொண்டே கம்பன் பார்க்கிறான், அந்த வெண்ணிலா வீசும் அதிசயத்தை:

வெண்ணிற நறைநிறை
  வெள்ளம் என்னவும்,
பண்நிறம் செறிந்(து)இடை
  பரந்த தென்னவும்,
உள்நிறை காமம்மிக்(கு)
  ஒழுகிற் றென்னவும்,
தண்நிறை நெடுநிலாத்
  தழைத்த(து) எங்குமே!

[நறை — கள். பண் — இசை. செறிந்த — இறங்கி. மிக்கு — மிகுதியாக. தண்நிறை — குளிர்ச்சி நிறைந்த.]

சாடிகளில் நுரைத்துக் கொண்டிருக்கும் வெண்ணிறக் கள்ளே இப்படிப் பொங்கி உலகமெங்கும் நிறைந்து வெள்ளமிட்டதோ? — என்று எண்ணும்படி யிருக்கிறதாம் அந்த நிலாவின் வெறியைப் பருகும்போது.



ஒரு சமயம், சங்கீதமே இறுகி வெண்ணிறம் பெற்று நிலா வடிவமாகி எங்கும் பாவியதோ? — என்று தோன்றுகிறதாம் அந்த வெண்ணிலவின் தண்ணொளி யின்பத்தை அனுபவிக்கும்போது.

திடீரென்று, "இல்லை இல்லை, அதெல்லா மில்லை; இந்த வீரர்களுக்கும் இவர்களுடைய காதலிகளுக்கும் உள்ளத்திலே பொங்கிக் கொண்டிருக்கும் காதல் தான் இப்படி அடங்காமல் வெளிப்பட்டது போலும்!" என்று சொல்லவும் தோன்றுகிறதாம்.

நிலவின் வெள்ளமும், நினைவின் வெள்ளமும் இப்படி இரண்டறத் தழைத்துப் பெருகி வருகின்றன. இந்த ஒரு பாட்டையே திரும்பத் திரும்பப் பாடிக் கொண்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. சந்திரோதயத்தின் வசீகரத்தை — ஆம், அந்தப் படைவீரர்கள் கள்ளும் காதலுமாய் அனுபவித்த அதே சந்திரோதய வசீகரத்தை,—இந்த வசீகரமான கவிதை எப்படியோ படம் பிடித்து நமக்குக் காட்டிவிடுகிறது!

* * * *

கள்ளாக மட்டுமா பொங்குகிறது இந்த நிலா? சிலருக்கு விஷமாகவும் இருக்கிறதாம். ஆம்; உயிரையே சுட்டுப் பொசுக்கும் விஷமாக! இந்த அதிசயத்தையும் கவிஞன் காட்டக் காண்போம்:

கலந்தவர்க்(கு) இனியதோர்
கள்ளுமாய்ப், பிரிந்(து)
உலந்தவர்க்(கு) உயிர்சுடு
விடமுமாய், உடன்
புலந்தவர்க்(கு) உதவிசெய்
புதிய தூதுமாய்,
மலர்ந்தது நெடுநிலா,
மதனன் வேண்டவே!

[உலந்தவர் - மனம் அழிந்தவர்கள். விடம் - விஷம். புலந்தவர் - ஊடலால் பிணங்கினவர்கள். மதனன் - மன்மதன்.]

பிரியாத காதலர்களுக்குத்தான் கள்ளாகிறது சந்திரிகை! அவர்களுடைய காதல் - இன்பத்தையும் காதல் - வெறியையும் மேலும் மேலும் பெருக்கிக் காட்டுகிறது. ஒருவரை யொருவர் பிரிந்து மனமழிந்திருக்கும் காதலன் — காதலியர்க்கோ இது இனிய கள்ளன்று, உயிரைச் சுடும் கொடிய விஷந்தான்!

இப்படி ஒருங்கே மதுவாகவும் நஞ்சாகவும் இருக்கும் வெண்ணிலா வேறொரு உத்தியோகமும் தேடுகிறதாம். உடனிருந்து பிணங்கிக் கலகம்

செய்யும் காதலிக்கும் காதலனுக்குமிடையே, இந்த நெடு நிலாவே தூது போய் இருவரையும் இணைத்து வைக்கிறதாம்.

சில காதலர்களுக்குக் கள்ளாகி, வேறு சில காதலர்களுக்கு விஷமாகி, இன்னும் சில காதலர்களுக்கு உதவிசெய் புதிய தூதமாகிறது நெடு நிலா. என்ன பட்சபாதம் !—

"நெடுநிலாத் தழைத்தது எங்குமே" என்று முந்திய பாட்டில் வர்ணித்து,

மலர்ந்தது நெடுநிலா,
மதனன் வேண்டவே !

என்று இந்தப் பாட்டை முடிப்பது, அந்த நிலவிற்கு இசைந்தவாறு, இந்த மேதையும் தழைத்து மலர்ந்து ஒளிவீசுவதைக் காட்டுகிறது.

காதற் கடவுளாகிய மன்மதனின் வேண்டுகோளை முன்னிட்டே, நிலா இப்படி யெல்லாம் தழைத்து மலர்ந்து எங்கும் பரவி வருகிறதாம்.

மதுவுண்டு இன்ப சாகரத்திலே மூழ்கிப் போனவர்கள் கொண்டாடும் சந்திரிகை இது. அழகுக் கள்ளைப் பருகி வெறிகொண்ட கவிஞர்களும் ரஸிகர்களும் கூட இப்படி யெல்லாம் சந்திரிகையை அனுபவிக்கத்தானே செய்கிறார்கள் ?

இத்தகைய சந்திரிகையில் ஆறுகளெல்லாம் கங்கையாகக் காட்சி தருகின்றனவாம். கங்கையை வெண்ணிற நதியாகவும், யமுனையைக் கன்னங் கரிய நதியாகவும் கூறுவது பிரசித்தம். பொதுவாக ஆழமான ஆறுகளெல்லாம் கருநீலமாய்க் காண்கின்றன. அந்த ஆற்று வெள்ளத்திலே, சந்திரன் நிலவு வெள்ளத்தைக் கொட்டும்போது, உருக்கிய வெள்ளியை ஓட விட்டது போலத் தோன்றுகிறதல்லவா ?



இப்படி நதிகளெல்லாம் கங்கை யாகும்போது, கருங் கடல்கள் பாற் கடலாகி விடுகின்றன; கரு மலை களெல்லாம் கைலையங்கிரியாகி விடு கின்றன! நிலவின் வசீகர சக்தியால் இயற்கைக்கு ஏற்படும் இத் தெய்விக அழகை வியந்து பாடுகிறது கவியுள் ளம்:

ஆறெலாம் கங்கையே
　　ஆய; ஆழிதாம்
கூறுபாற் கடலையே
　　ஒத்த; குன்றெலாம்
315 ஈறிலான் கயிலையை
　　இயைந்த; என் இனி
வேறுயாம் புகல்வது
　　நிலவின் வீக்கமே?

[ஆய—ஆயின. கூறு — பிரசித்த மாய்ச் சொல்லப்படுகிற. ஆழி—சமுத் திரங்கள். ஈறிலான் — முடிவற்ற சிவபெருமான். இயைந்த-இசைந்த. வீக்கம்—மிகுதி. என்—என்ன?]

• • •

இத்தகைய நிலவிலே, கள்ளும் அமிர்தமாய்க் காட்சி தருகிறது.

ஆக்கிய அமிழ்தென
　　அம்பொன் வள்ளத்து
316 வாக்கிய பசுநறை
　　மாந்தல் மேயினர்.

[அமிழ்தென — அமிர்தம் போல. வள்ளம்-கிண்ணம். வாக்கிய—வார்க் கப்பெற்ற. பசுநறை - புதிய கள். மாந்தல் மேயினர்-குடிக்கத் தொடங் கினர்கள்.]

நிலவின் வெள்ளத்திலே முழுகிப் போனவர்கள் கள்ளின் வெள்ளத்தி லும் மூழ்கிப் போகிறார்கள்!

என்ன நிலாவிருந்து! இந்த நிலாவே விருந்துதான்; ஆம், இந்த நிலாக் கவிதை ரஸிகர்களுக்கெல் லாம் ஓர் அருமந்த விருந்து.

பி. ஸ்ரீ.

85. மது உள்ளே — மதி வெளியே

பூம் பந்தலிலும், முத்துப் பந்தலிலும், கூடாரங்களிலும், தாம் நீராடி நீங்கிய தடாகம் போன்ற பளிங்குப் பாறைகளிலும் தங்கிப் பெண்கள் மதுபானம் செய்யத் தொடங்கி விட்டார்களாம். அவர்கள் தங்கள் வாயிலே மதுவை ஊற்றிக் கொண்டது ஏற்கெனவே தேனையுடைய பூவிலே மறுபடியும் தேனை வார்த்தாற் போலத் தோன்றுகிறது :

> தேனுடை மலரிடைத்
> தேன்பெய் தென்னவே !

அழகு வாய்ந்த மங்கையர் மதுவை உள்ளே தள்ளும் காட்சி இது !

• • • •

ஒருத்தி ஒரு பொற்கிண்ணத்தில் வைத்திருக்கும் மதுவிலே தன்னுடைய நிழலைப் பார்க்கிறாளாம். பார்த்ததும், அங்கே வேறொருத்தி இருப்பதாக நினைத்து, “ தோழியே ! நீயும் என்னுடன் கள் உண்பாயாக ” என்று அழைக்கிறாளாம் :

> விடன்ஒக்கும் நெடிய நோக்கின்
> அமிழ்தொக்கும் இன்சொ லார்தம்,
> மடன்ஒக்கும் மடனும் உண்டே?
> வாள்நுதல் ஒருத்தி, காணாத்
> தடன்ஒக்கும் நிழலைப், “ பொன்செய்
> தண்நறும் தேறல் வள்ளத்(து),
> உடன்ஒக்க உவந்து நீயும்
> உண்ணுதி தோழி !” என்றாள்.

[விடன் - விஷம். நெடிய நோக்கு - நீண்ட கண்கள். மடன்-மடமை. உண்டே - உண்டோ. வாள் நுதல் - ஒளி பொருந்திய நெற்றி. காணா - கண்டு. தடன் - பெருமை. பொன் செய் வள்ளம் — பொன்னால் செய்த கிண்ணம். தண்நறும் தேறல் - குளிர்ந்த மணமுள்ள தெளிந்த கள். உண்ணுதி - உண்பாயாக.]

மதுவை உள்ளே தள்ளி, மதியை வெளியே தள்ளி விட்ட இப் பெண்ணின் மடமையைப் பாருங்கள். "தோழி! நீயும் என்னுடன் சரிநிகர் சமானமாய்க் கள்ளுண்டு ஆனந்தமடைவாய்" என்று தன் நிழலை நோக்கி அழைக்கிறாள். அந்த இனிய சொல் அமிர்தம் போலிருக்கிறதாம் காதலனுக்கு; அந்தப் பார்வையோ விஷம்!

கொன்றிடும் என இனிதாய், — இன்பக்
  கொடுங் கனலாய், — அனல்
    சுவை அமுதாய்

என்ற பாரதி வர்ணிக்கும் காதலைத்தான் இப்படி வர்ணிக்கிறான் கம்பன்.

வேறொரு பெண் கள்ளுப் பாண்டத்திலே தன் முகத்தைக் கண்டு சிரித்துக் கொண்டே, "அட பைத்தியக் காரி! என்ன செய்கிறாயடி? நிரம்பக் கள் இருக்கிறது ஜாடி ஜாடியாக; என்னுடைய எச்சிற்கள்ளைச் சாப்பிடுகிறாயே!" என்கிறாள்:

அச்சநுண் மருங்கு லாள்ஓர்
  அணங்கனாள், அளக பந்தி
நச்சுவேல் கருங்கண்- செவ்வாய்
  நகைமுகம் மதுவில் தோன்ற,
319 "பிச்சி! நீ என்செய் தாய்? இப்
  பெருநற(வு) இருக்க, வாளா
எச்சிலை நுகர்தியோ?" என்(று)
  எயிற்(று)அரும்(பு) இலங்க நக்காள்.

[அச்ச நுண் மருங்குலாள் — பார்ப்பவர்கள் 'இது முறிந்து போமோ?' என்று அஞ்சுவதற்குக் காரணமாகிய நுண்ணிய இடையை யுடையவள். அணங்கனாள் — தெய்வப் பெண் போன்றவள். அளக பந்தி — கூந்தலின் தொகுதி. நச்சுவேல் — நஞ்சு பூசிய வேல். நகைமுகம் — சிரித்த முகம். பிச்சி — பைத்தியக்காரி. பெருநறவு — மிகுதியான கள். வாளா — வீணாக. எயிற்று அரும்பு — பற்களாகிய முல்லை யரும்புகள். நக்காள் — சிரித்தாள்.]

வேறொருத்தி வேறொரு கள்ளுச் சாடியைப் பார்க்கிறாள். அதில் கள் இல்லை. சந்திரிகை தான் வந்து விழுகிறது. அதனாலேயே கள் நிறைந்தது போலத் தோன்றுகிறதாம், ஏற்கெனவே கள்ளுண்ட இவளுக்கு. உடனே வாய் வைத்துப் பருக ஆரம்பிக்கிறாள், உடனே வெட்கப் படுகிறாள்! பக்கத்தில் இருந்தவர்களெல்லாம் பார்த்துச் சிரிப்பார்களல்லவா?

புறமெலாம் நகைசெய்(து) ஏச,
  பொருவரு மேனி வேறோர்
மறம்உலாம் கொலைவேல் - கண்ணாள்,
320 மணியின்வள் ளத்து, வெள்ளை
நிறநிலாக் கற்றை பாய,
  நிறைந்தது போன்று தோன்ற,
நறவென அதனை வாயில்
  வைத்தவள்; நாண்உட் கொண்டாள்.

[புறமெலாம் — பக்கத்தி லுள்ளவர்களெல்லாம். பொருவரும் — ஒப்பற்ற. மறம் உலாம் — கொடுமை உலாவுகின்ற. மணியின் வள்ளம் — ரத்தினமயமான கிண்ணம். கற்றை — தொகுதி. நறவு — கள். நாண் உட்கொண்டாள் — நாணத்தை உள்ளத்திலே கொண்டாள்.]

வேறொருத்தி கள்ளினுள் சந்திரன் பிரதிபலிக்கக் காண்கிறாள். ராகு என்ற பாம்புக்குப் பயந்துதான் வானத்து அம்புலி இங்கே வந்து ஒளிந்து கொண்டிருக்கிறது!" என்று நினைத்து, 'அஞ்சாதே!' என்று அபயம் கொடுக்கிறாளாம். தான் கணவனைப் பிரிந்த காலத்திலும், ஊடல் கொண்ட சமயங்களிலும் சந்திரன் தன்னை ஹிம்ஸித்திருந்தும், பெருந்தன்மையுடன் அபயமளிக்கிறாள் என்பது குறிப்பு.

களித்தகண் மதர்ப்ப ஆங்கோர்
  கனங்குழை, கள்ளின் உள்ளால்
வெளிப்படு கின்ற காட்சி
  வெண்மதி நிழலை நோக்கி,
''அளித்தனன் அபயம்! வானத்(து)
  அரவினை அஞ்சி நீவந்(து)
ஒளித்தனை! அஞ்சல்'' என்(று)ஆங்(கு)
  இனியன உணர்த்து கின்றாள்.

[மதர்ப்ப — செருக்குத் தோன்ற.. கனங்குழை — குழை எனும் காதணி அணிந்த பெண். உள்ளால் – உள்ளே. வெண்மதி – சந்திரன். வானத்து அரவு — வானத்திலுள்ள ராகு என்னும் பாம்பு. அஞ்சல்–அஞ்சாதே.]



"என்னை ஹிம்ஸித்த நீ என் மதுச் சாடிக்குள்ளேயே வந்து பதுங்கும் காலமும் வந்துவிட்டதல்லவா? 'முற்பகல் செய்தால் பிற்பகல் விளையும்' என்றபடி என்னைப் பயமுறுத்திய நீயே இப்போது பயந்து நடுங்குகிறாய்! இனியாவது ஹிம்ஸை நெறியை விட்டு நீயும் அஹிம்ஸா தர்மத்தைக் கைக்கொள்ள வேண்டும்" என்றெல்லாம் இந்தப் பெண் சந்திரனுக்கு ஹிதோபதேசம் செய்வதாகக் கருதலாம். 'இனியன உணர்த்துகின்றாள்' என்று கவிஞன் குறிப்பிடுகிறானல்லவா?

வேறொரு பெண் ஜாடிக் கள்ளில் தோன்றிய தன் முகத்தையே சந்திரனென்று மயங்குகிறாளாம். "மதுவின் ஆசையால் விண்மதியே வந்து விழுந்து விட்டது ஜாடிக்குள்ளே!" என்று எண்ணுகிறாளாம். இப்படி எண்ணி அந்தச் சந்திரனை நோக்கி, "நான் என் கணவனோடு ஊடல் கொள்ளும் நாளில், நீ இனி வெம்மை தரக் கூடாது; குளிர்ந்த சந்திரனாகவே அப்போதும் இருக்க வேண்டும். அப்படி உறுதி தந்தால், இந்த மணிக் கிண்ணத்தில் மதுபானம் செய்ய அனுமதி தருவேன்" என்கிறாள்:

கள்மணி வள்ளத் துள்ளே,
　　களிக்கும்தன் முகத்தை நோக்கி,
"விண்மதி மதுவின் ஆசை
　　விழ்ந்தது!" என்(று) ஒருத்தி உன்னி,
"உள்மகிழ் துணைவ னோடும்
　　ஊடுநாள் வெம்மை நீங்கித்
தண்மதி யாதி; ஆகில்,
　　தருவன் இந் நறவை!" என்றாள்.

[வள்ளம் — கிண்ணம். உன்னி — நினைத்து. ஊடு நாள் — ஊடல் புரியும் நாள். தண்மதி — குளிர்ந்த சந்திரன். நறவு — மது.]

இவை யெல்லாம் மதுவை உள்ளே தள்ளி, மதியை வெளியே தள்ளி விட்ட பெண்களின் செயல்கள்.



பி. ஸ்ரீ.

86. கள்ளும் காதலும்—ஆராய்ச்சிகளும்

ஒருத்தி தான் இருந்த பூம்பந்தலின் இடைவெளி வழியாக ஒழுகும் வெண்ணிலவின் தாரையைக் கள்ளென்று மயங்கி, தன் மதுக் கிண்ணத்தாலே ஏந்துகிறாளாம். நிலாவிலிருந்தும் கள் இறக்க முடியுமா? அந்த ஆராய்ச்சிதான் ஒருவேளை நடைபெறுகிறதோ? பாருங்கள் :

இழிகின்ற கொழுநி லாவை
நறவென வள்ளத்(து) ஏற்றாள்!

[இழிகின்ற—இறங்குகின்ற. நறவு—மது. வள்ளம்—கிண்ணம்.]

ஒருத்தி கள்ளுண்ட மயக்கத்தால் சொல்லும் செயலும் தடுமாறப் பூமாலையை இடையிலும், பொன் மாலையைக் கூந்தலிலும் சுற்றித் தன்னை அலங்கரித்துக் கொள்ளுகிறாளாம். வேறொருத்தி, கள்ளுண்ட மயக்கத்தால் முன்னங்கை நடுக்க மதுவை யெல்லாம் சிந்தி விட்டு, அவ்வெறுங் கிண்ணத்தைக் கீழ் மேலாகக் கொண்டு வாயிதழில் வைத்துக் கொள்ளுகிறாளாம். "இந்த மதுக் கிண்ணந்தான் மதுவுக்கு ஆதாரமா? மதுவே இந்தக் கிண்ணத்திற்கு ஆதாரமா?" என்ற ஆராய்ச்சிதான் இப்போது நடக்கிறதோ என்னவோ, யார் கண்டார்?

தற்காலத்தில் நாகரிக ஹோட்டெல்களிலே குளிர்ந்த பானங்களை 'ஸ்ட்ரா' வைத்து உறிஞ்சுகிறார்களல்லவா? இப்படியே தண்டின் ஒரு புறத்தை மதுவிலும், மறு புறத்தை வாயிலும் கொண்டு மதுபானம் செய்யும் இந்த நாகரிக மங்கையைப் பாருங்கள் :

தேன்தரு கமலச் செவ்வாய்
திறந்தனள்; நுகர நாணி,
ஊன்றிய கழுநீர் நாளத்
தாளினால் ஒருத்தி உண்டாள்.

[தேன்தரு கமலச் செவ்வாய்—தேனைத் தரும் தாமரை போன்ற சிவந்த வாய். கழுநீர்—செவ்வல்லி. நாளத் தாள்—உள்ளே தொளையுள்ள தண்டு.]

லோபிகளான பெருஞ் செல்வர்களைச் சுற்றிச் சுற்றி வீணாக ஆரவாரம் செய்வது போல, வண்டுகள் இந்த மதுச் சாடியைச் சுற்றி மொய்த்துக்

தொண்டும் சிங்காரம் செய்த கொண்டையும் இருக்கின்றனவாம். இந்த நிலையில் மதுபானம் செய்வதற்கு 'மது இருக்கும் செந்தாமரை' என்று சொல்லும்படி பானத்தன் வாயைத் திறக்கிறளாம் ஒருத்தி. ஆனல், அந்த வண்டுகளைக் கண்டு கூசி ஒரு யுக்தி செய்கிறள். உட்குழலான ஒரு செவ்வல்லிப் பூ தண்டினல் மதுவை உறிஞ்சிப் பருகுகிறளாம். இத்தகைய ஆராய்ச்சி களை இவள் ஏற்கெனவே நடத்திப் பார்த்தவளாக இருக்க வேண்டும்.

இப்படியெல்லாம் பலர், கண் சிவக்க, உரை தடுமாற, உடல் வியர்க்க, மது வெறியில் இருக்கிறர்கள். இவர்களுக் கிடையே, கள் உண்ணு ஒருத்தியையும் கவிஞன் சுட்டிக் காட்டுகிறன். இவளுடைய கண்களின் பிறழ்ச்சிக்குத் தடாகத்திலே அங்கு மிங்குமாகப் புரண்டு கொண் டிருக்கும் கயல் மீன்களே தோற்றுப் போக வேண்டியதுதான்! மேலும், உறை கழித்த வாள்போல் அவ்வளவு கூர்மையாக விளங்குகின்றன இக் கண்கள். இவளுடைய கூந்தலையும், சாயலையும் பார்த்து விட்டால் "தோகை விரித்த மயில்தானே?" என்று பிரமிக்கும்படியும் இருக்கிறதாம்.

சரி, இவள் ஏன் மதுபானம் செய்ய வில்லை? கவிஞன் இந்த 'மது விலக்கு' மங்கையையும் காட்டிக் காரணமும் காட்டுகிறன்:

புள்ளுறை கமல வாவிப்
பொருகயல் வெருவி யோட,
வள்ளுறை கழித்த வாள்போல்
வசியுற வயங்கு கண்ணுள்,
கள்ளுறை மலர்மென் கூந்தல்
களிஇள மஞ்ஞை அன்னுள்,
'உள்உறை அன்பன் உண்ணுன்'
எனநற(வு) உண்ணல் என்ணுள்.



[புள்—பறவை, நீர்ப் பறவை. உறை—வாழ் கிற. கமல வாவி—தாமரைத் தடாகம். பொருவு இயல்—மோதும் மீன். வெருவி—அஞ்சி. தோல் உறை—தோலால் செய்த உறை. வசியுற—நீர்மையுற. வயங்கு—விளங்குகிற. கள்—தேன். களி இள மஞ்ஞை—களித்த இள மயில். அன்னான்—ஒப்பவன். நறவு—கள்.]



இவளுடைய கணவன் மது விலக்கு விரதம் பூண்டவன். அதனால், இவளும் மதுவை விலக்கி விடுகிறாள் என்று கூற வந்த கவிஞன்,

> 'உள்உறை அன்பன் உன்னான்'
> எனநற(வு) உன்னல் என்னாள். 326 210

என்கிறான்.

மதுப் பருகாத அன்பன் இவள் உள்ளத்திலே நீங்காமலிருக்கிறானும். இவனை இவள் சந்தித்துக் கொண்டிருக்கிறாள் என்பது கருத்து. தான் மதுவைப் பருகினால், அந்தப் பழக்கமில்லாமல் தன் உள்ளத்தே இருக்கும் அவன்மீது அந்த மதுவானது பட்டு அசுத்தமாக்கி விடுமோ?— என்று ஆராய்ந்து இவளும் மதுவை வெறுத்தாளோ?

மதுபான ஆராய்ச்சிகளுக்கிடையே காதலைப் பற்றிய ஆராய்ச்சிகளும் நடைபெறுகின்றன. காதலிலும் கள் வெறியுண்டல்லவா?

வேறொரு காதலி காதலனிடம் தன் தோழிகளை ஒருத்தி பின் ஒருத்தியாகத் தூது அனுப்பிக் கொண்டேயிருந்தாள். "தூது போய் வருவதற்குக் கொஞ்ச நேரம் பிடிக்காதா?" என்ற நினைப்பே இல்லை. இப்படித் தோழிகளையெல்லாம், பின்னே போனவர் முன்னே போனவர்களைத் தொடர்ந்து போகும்படி அனுப்பிவிட்டாள். பின்னும் அனுப்புவதற்குத் தோழி இல்லாமையால், தானும் அவர்கள் பின்னே தனியளாய்ப் போகிறாளாம், காதலனுள்ள இடம் நாடி:

> மான்விழி ஒருத்திஓர்
> மதுகை வேந்தன்பால் 327
> ஆனதன் பாங்கியர்
> ஆயி னாரெலாம்

பேர்னவர் போனவர்த்
தொடரப் போக்கினுள்;
தானும்அங்(கு) அவர்கள்பின்
தமியள் ஏகினுள்!

[மதகை — வலிமை. பாங்கி
யர் — தோழியர். தமியள் — தனி
யள்.]

ஒருத்தி காதலாகிய கடலிலே
மிதந்து கொண்டிருக்கிறளாம். கட
லில்தானு? அல்லது தெப்பத்திலா?
இவள் என்ன செய்கிறுள்?

விரைசெய்பூஞ் சேக்கையந்
தெப்ப மீமிசைக்
கரைசெயா ஆசையங்
கடலு ளாள்,ஒரு
பிரசமென் குதலையாள்,
கொழுநன் பேரெலாம்
உரைசெயும் கிள்ளையை
உவந்து புல்லினுள்.

328

[விரை—வாசனை. சேக்கை—
படுக்கை. அம் தெப்பம் — அழகிய
தெப்பம். பிரசம்—தேன். என்—
என்ற சொல்லக்கூடிய. குதலையாள்
-மழலைச் சொற்களையுடைய ஒருத்தி.
கிள்ளை—கிளி. புல்லினுள்—தழுவி
னுள்.]

இவள் ஆசைக் கடலிலே கரை
தெரியாமல், திசை யறியாமல், மித
ந்து கொண்டிருக்கிறளாம், அந்தப்
படுக்கையையே தெப்பமாகக்கொண்
டது போல். அருகே இருக்கிறது
இவள் வளர்த்த கிளிப்பிள்ளை. அது
இவள் கற்பித்தபடி காதலனுடைய
பேர்களை யெல்லாம் சொல்லிக்
கொண்டிருக்கிறதாம். பேர்கள் என்
றதனுல், பெற்றோரிட்ட அந்தப்
பெயர் மட்டு மில்லை; அவனுக்கு
வீரம் வெற்றி காரணமாகக் கிடை
த்த பட்டப் பெயர்களையுந்தான் என்
பது குறிப்பு. தன் கிளி காது
குளிர அந்தப் பேர்களை யெல்லாம்
சொல்வதைக் கேட்டு, இவள் உள்
ளம் குளிர்ந்து அக்கிளியைத் தழு
விக் கொள்கிறுளாம்.

பி. ஸ்ரீ.

87. குட்டி நாடகங்கள்

காதலனும் காதலியுமாக இருக்கிறார்கள். மதுபான மயக்கத்திலே,
ண் இவளை இவளுடைய பெயரைச் சொல்லி அழைக்கவில்லை. வேறொரு
ரைச் சொல்லிக் கூப்பிடுகிறான். இதைக் கேட்டதும், இவளுக்குக்
யந்தானே வரவேண்டியது நியாயம்? ஆனால் சிரிப்பு வருகிறதாம்;
ரு கண்ணீரும் வருகிறதாம். ஏன்? எப்படி?

வளைபயில் முன்கைஓர்
  மயில்அனாள், தனக்(கு)
இளையவள் பெயரினைக்
  கொழுநன் ஈதலும்,
முளைஎயி(று) இலங்கிட
  முறுவல் வந்தது;
களகள உதிர்ந்தன
  கயல் - கண் ஆலியே!

[வளை பயில் - வளையோடு கூடிய. அனாள் - அன்னாள்; போன்ற
கொழுநன் - கணவன். முளை எயிறு - முளை போன்ற பற்கள்.
வல் - சிரிப்பு. கயல் கண் - கயல் மீன்போல் புரளும் கண்கள். ஆலி-
துளிகள்.]

..வளை யணிந்த கையைப் பிடித்துக் கொண்டு இவளை அன்போடு
ட எண்ணியவனுக்கு, மதுபான மயக்கத்தால் இவள் பெயர் கூட இச்
ம் மறந்து போய்விட்டது. இவனுக்கு இளையாளான மனைவியும்
தி உண்டு: இவள் மூத்த மனைவி. இளையாள் ஏதோ ஒரு காரணத்
இந்த யாத்திரையில் கலந்து கொள்ளவில்லை, வீட்டில் இருக்கிறாள்
று வைத்துக் கொள்ளலாம். அந்த இளையவள் பெயர் பளிச்சென்று
கத்துக்கு வரவும், அந்தப் பெயரைச் சொல்லி அழைத்து விட்டான்,
மூத்தாளை. அழைத்ததும், எத்தனையோ வயதுகள் திடீரென்று,
றந்து விட்டது போலத் தோன்றியது இவளுக்கு. நன்றாகச் சிரித்து
டாள். உடனேயே, "அவளுடைய ஞாபகந்தானே இப்போதும்!"
ம் நினைவு வருகிறது; வந்ததும் கண்ணீரும் கள கள வென்று சிரிப்

லைத் தூக்கிக் கொண்டு வந்து விட்டதாம். இனி இந்த 'ரெண்டு ஸார்க்கார'னுடைய திண்டாட்டத்தை நம் மனோபாவத்திற்கு விட் கிறான் கவிஞன்.

காதலனை எதிர் பார்த்துக்கொண்டிருக்கும் ஒரு பெண்மணி, பூ சூட்டிய கூந்தலைச் சரியாகக் கட்டிக் கொள்ளாமலே ஆலோசனை ஆழ்ந்து விடுகிறாள். "அவர் வந்தால் சண்டை போடுகிறதா, என் இப்ப பிரிந்து போனீர் என்று? அல்லது, இந்தப் பிரிவுத் துயரம் ஒழியுட் அவரைத் தழுவிக் கொள்வேனோ?" என்ற சர்ச்சையில் இருக்கிறாள். றென்று, "இல்லை, இல்லை; அவருடைய குணங்களை வீணையில் ப கொண்டிருக்கலாமல்லவா? அவர் வரும்போது உச்சி குளிர்ந்து பே ரே?" என்றும் எண்ணமிடுகிறாள்.

இந்த விதமான சர்ச்சைகள் பல. முடிவு கட்ட வில்லை; கூந்தலை முடித்துக் கட்டிக் கொள்ளவில்லை. காதலனை எதிர் நோக்கிச் சிங்காரித் கொள்வதை மறந்தே விடுகிறாள்:

தோ(டு)அவிழ் கூந்தலாள்
    ஒருத்தி, "தோன்றலோ(டு)
ஊடுகே னோ? உயிர்
    உருகு நோய்கெடக்
330 கூடுகே னோ? அவன்
    குணங்கள் வீணையில்
பாடுகே னோ?" எனப்
    பலவும் பன்னினாள்.

[தோடு அவிழ் — பூவின் இதழ்கள் மலரப் பெற்ற. தோன்றல் (இங்கே) கணவன். ஊடுகேனோ—ஊடல் கொள்வேனோ? பன்னி — ஆராய்ந்தாள்.]

• • •

ஒருத்தி—கணவனோடு ஊடல் கொண்டவள் — தன் உள்ளத்தில் உ தைத் தோழிகளிடத்திலிருந்தும் மறைக்கப் பார்க்கிறாள். அவர்களுக் பராக்குக் காட்டுவது போல், மகர வீணையை எடுத்து மலர்க்கரம் சிவ மீட்டுகிறாளாம். ஆனால், அந்த வீணை கானமே ஊடலையும் உள்ளத் உள்ளதையும் விளம்பரப்படுத்தி விடுகிறது, குறிப்பு உணரவல்ல தே களுக்கு. அவர்களையும் ஏமாற்றி விட முடியுமா?

மாடகம் பற்றிய
    மகர வீணைதன்
தோ(டு)அவிழ் மலர்க்கரம்
331 சிவப்பத் தொட்டனள்,
பாடினள் ஒருத்தி; தன்
    பாங்கி யார்களோ(டு)
ஊடின(து) உரைசெயாள்
    உள்ளத்(து) உள்ளதே.

[மாடகம் — பிரடை; முறுக்காணி. தோடு அவிழ் — மலரி விரிந்தது போன்ற.]

நாயகனைப் பிரிந்திருக்கும் ஒருத்தி, கண்களை மூடிக்கொண்டு மண வட்டமாகச் சுழித்துக் கொண்டிருக்கிறாள். கண்ணைத் திறந்து, வட்டத்தின் இரண்டு தலையும் கூடுகின்றனவா என்றும் பார்த்துக் கிறாள். எத்தனையோ தரம் அப்படிச் சுழித்துச் சுழித்துப் பார்த் வட்டம் கூடவில்லை. எனவே, 'காதலனைக் கூடுதல் என்பதும் நோ போய் விடுமோ ?' என்று ஏங்குகிறாள், பெருமூச் செறிகிறாள்.

குறி பார்ப்பதுபோல், இப்படியெல்லாம் 'கூடல் இழைத்து'ப் பார்க்கும் காதலியின் நிலையை எவ்வளவு சுவாரஸ்யமாகக் காட்டுகிறான் கவிஞன் :

குழைத்தபூங் கொம்பனாள்
ஒருத்தி கூடலை
இழைத்தனள், அது அவள்
இட்ட போதெலாம்
பிழைத்தலும், அனங்கவேள்
பிழைப்பில் அம்பொடும்
உழைத்தனள், உயிர்த்தனள்
உயிர் உன்(டு) என்னவே!

332 54

[குழைத்த—தளிர்த்த. பூங் கொம்பனாள்—பூங்கொடி போன்றவள். பிழைத்தலும் — பிழையாகப் போதலும்; ஒன்று சேராமல் போதலும். அனங்கவேள் — மன்மதன். பிழைப்பில் அம்பு — குறி தவறாத மலரம்பு. உழைத்தனள் — வருத்தப்பட்டாள். உயிர்த்தனள் — பெருமூச்செறிந் தாள்.]

குறி பார்த்துக் குறி பார்த்து மனம் சலித்துப் போனவள், குறி தவறாத மன்மத பாணங்களுக்கு இலக்காகி மரண வேதனை அனுபவிக் கிறாள். இந்த நிலையில் பெருமூச்செறிவதுதான், உயிர் உடலுடன் கூடி இருப்பதற்கே அடையாளம் என்பது கருத்து.

212



வேறொரு காதலி பந்தும் கையுமாய் இருக்கிறாள். எனினும் விளையாட்டில் புத்தி செல்லவில்லை. காதலனுக்குத் தூது அனுப்புகி 'எப்போது வரப் போகிறானோ?' என்று துடித்துக் கொண்டிருக்கி ஆனால், அவன் வாசலில் வந்ததும் என்ன செய்கிறாள்? கதவை நன் திறந்து, அவனுடன் வரவேற்கிறாளா? படீரென்று கதவையடைத்து கிறாள், தன்னுடைய 'சுந்தரன்' உள்ளே வர முடியாதபடி. இந்தச் பந்தும் கையுமாக வந்து பந்தை அணி செய்யும் அந்தக் கை களைக் கொண்டு, தயை தாக்ஷிண்யம் (கண்ணோட்டம்) இல்லாமல் கத அடைப்பதற்குக் காரணந்தான் என்ன?

பந்(து)அணி விரலினாள்
 ஒருத்தி பையுளாள்,
சுந்தரன் ஒருவன்பால்
 தூது போக்கினாள்;
333 வந்தனன் எனக்கடை
 அடைத்து மாற்றினாள்:
சிந்தனை தெரிந்திலம்—
 சிவந்த நாட்டமே!

[அணி விரலினள் — அழகு செய்யும் விரலாள். பையுள் — (இங் பிரிவுத் துயர். கடை — வாச கதவு. நாட்டம் — கண்கள்.]

இவள் தூது அனுப்பின அவன்தான் சிறிதும் தாமதமின் வந்து விட்டானே, அப்படியி தும் அக் கண்கள் அப்படி எ சீறிச் சிவந்திருக்கின்றன? 'எ தூதினால்தானே வந்து சே தாய்? உன் விருப்பத்தால் நீ கவே வரவில்லையே!' என் கோபமா? 'சிந்தனை தெரி திலம்' என்று கவிஞனே சொ லும்போது, நாம் கண்டு பிடிக் முடியுமா? தர்க்க ரீதிக் அதீதமான காதல் விவகா களைப் பகுத்தறிவைக் கொண் தான் பரிசீலனை செய்ய மு யுமா?

ஒரு குட்டிச் செய்யுளில் ஒ குட்டி நாடகம் என்று சொல்லு படி, காட்சிகள் கண்முன் வ கின்றன, இந்தப் பாட்டை பாடிப் பாடிப் பரவசமாகு போது.

பி. ஸ்ரீ.

88. மதுவா, மதியா, மன்மதனா?

‘வயிரத்தின் வன்மை, பூவின் மென்மை’ என்று சாதாரணமாய்ச் சொல்வதுண்டு. வயிரத்தைப் பூ வெல்லுமா? வயிரத் தோளைப் பூமாலையால் கட்டிவிட முடியுமா? அதிலும் ஒரு அபலை கட்டி விடுகிறாளாம் பூமாலையால், வடக் கயிறுகளாலும் சங்கிலிகளாலும் கூடக் கட்டமுடியாத, வஜ்ராயுதம் போன்ற, வீரத் தோள்களை. சரி, காதலர்–உலகமா? சரி, சரி; அங்கே இத்தகைய விநோதங்கள் சர்வ சாதாரணம்தான்.

சோலைமென் குயிலனாள்,
சுற்றி வீக்கிய
மாலையை நிமிர்ந்தில
வயிரத் தோள்களே !

[மென்குயிலனாள் — மெல்லிய குயில் போலும் குரலையுடையவள். வீக்கிய — கட்டிய.]

கட்டிப் போட விரும்பியவளுக்குக் கயிறு கிடைக்கவில்லை, பூமாலைதான் கிடைத்தது. ‘வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்’ இந்த ‘வல்லவ’ளுக்குப் பூமாலை ஆபரணமும்தான், ஆயுதமும் தான்! இதைக் கொண்டே தோள்களைச் சுற்றிக் கட்டினாள், ‘உனக்கு இவ்வளவும் வேணும்’ என்று சொல்லிக் கொண்டே.

இந்தக் கட்டிலிருந்து தோள்கள் தம்மை விடுவித்துக் கொள்ள முடியவில்லையாம், மீறி நிமிரவும் முடியவில்லையாம். அவள் மனத்தைக் கட்டுவதற்குத்தான் இப்படி இத் தோள்கள் கட்டுண்டு நிற்கின்றனவோ? சூழ்ச்சியா, தோல்வியா?

சரி, என்ன குற்றத்திற்காகத் தான் இந்தத் தண்டனை? குற்றத்திற்கும் தண்டனைக்கும் காரணம் மதுவா, மதியா, மன்மதன் தானா?

* * * *

சோர்ந்த கூந்தலையும் சேர்த்துக் கட்டிக்கொள்ளாமலே ஒரு காதலி தன் துயரக் கதையைத் தோழியிடம் சொல்லக் கருதினாள். சொல்லவும்

முடியாத வருத்தம் ஏற்பட்டு விட்டதாம். அவ்வளவு வருத்தத்திற்கும் காரணமான மன்மதனை நோக்கினாள்; (யாரோ ஒரு கொலைகாரனை எதிரே நோக்குவது போல்) — நோக்கித் தோழியையும் நோக்கினாள். அவ்வளவு தான், அந்த நோக்கிலேயே அந்தக் கதையை வாசித்து விட்டாள். உடனே தலைவன் இருந்த கூடாரத்தை நோக்குகிறாளாம் தோழி. அவனை அழைத்து வரப் புறப்படுகிறாள் என்பதையும், 'நான் போய் அழைத்து வருகிறேன், நீ வருந்தாதே' என்று குறிப்பாக உணர்த்துகிறாள் என்பதையும் கவிஞன் சொல்லாமல் சொல்லிக் காட்டுகிறான்.



பக்கத்திலுள்ளவர்கள் தெரிந்து கொள்ளாதபடி தலைவியும் தோழியும் குறிப்பினால் ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளும் சாதுரியத்தை இதோ பாருங்கள்:

சோர்குழல் ஒருத்திதன்
  வருத்தம் சொல்லுவான்,
மாரனை நோக்கி, ஓர்
  மாதை நோக்கினாள்;
335 காரிகை யாள், அவள்
  கருத்தை நோக்கி, ஓர்
வேரியந் தெரியலான்
  வீடு நோக்கினாள்.

[சோர்குழல் — சோர்ந்த கூந்தல். சொல்லுவான் — சொல்லும் பொருட்டு. மாரன் — மன்மதன். காரிகையாள் — பெண்; தோழி. வேரியம் தெரியலான் — தேனோடுகூடிய அழகிய மாலையணிந்த தலைவன்.]

ஒரு காதலி தன் காதலனிடமிருந்து செய்தி வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால், காத்திருக்கப் பொறுமையில்லை. ஏதோ தூது வந்துவிட்டது போலவே விரைந்து போகிறாளாம். அவளை இவ்வளவு துரிதமாக மணவாளன் உள்ள இடத்திற்கு அழைத்துப் போகும் அந்தத் 'தூது'தான் எது?

சினங்கெழு வாட்கைஓர்
 செம்மல் பால், ஒரு
கனங்குழை மயிலனாள்
 கடிது போயினாள்:
மனங் குழை நறவமோ?
 மாலை தான்கொலோ?
அனங்கனோ? யார்கொலோ,
 அழைத்த தூதரே?

[சினம் கெழு — சினம் பொருந்திய. வாட்கை — வாளை ஏந்திய கை. செம்மல்பால் — தலைவனிடம். கனங்குழை — பொன்னால் செய்த காதணி. மயிலனாள் — மயில்போலும் சாயலுடையவள். கடிது — விரைந்து. மனம் குழை நறவமோ — மனத்தை இளக்கும் மதுவோ? அனங்கனோ — மன்மதனோ?]

"மதுவா, மாலைப் பொழுதா, மன்மதனா, இவன் மதிதானா, 'இவளை இப்போது இவ்வளவு அவசரமாக அழைத்துச் செல்லும் தூதர்? நமக்குத் தெரியவில்லையே" என்ற கவிஞன் கை விரிப்பதே, இவளுடைய ஆத்திரத்தை எவ்வளவு தெளிவாகத் தெரிவிக்கிறது!



ஒருத்தி காதலன் மீது கோபங் கொள்ளுகிறாள். ஊடல்தான் காரணம் என்று சொல்ல வேண்டியதில்லை. ஆனால் இந்த ஊடல் — நாடகத்தை இவளால் சரியாக நடத்தித் தான் காட்ட முடிகிறதா? கோபத்தோடு மோகம் போராடுகிறது. இந்தப் போரின் வெற்றி-தோல்வி தான் ஊடல் — போரின் வெற்றி தோல்விகளையும் நிர்ணயிக்க வேண்டும்.

இந்தப் போராட்டம் ஆரம்பத்திலேயே எப்படிக் காதலனுக்கு V — தினம் ஆகி விடுகிறது! கவிதை வாயிலாகவே பார்க்கலாம்:

தொகுதரு காதற்குத்
தோற்ற சீற்றத்(து)ஓர்
வகிர்மதி நெற்றியாள்
மழைக்கண் ஆலிவந்(து)
337 உகுதலும், 'உற்றதென்?'
என்று கொற்றவன்
நகுதலும், நக்கனள்,
நாணும் நீங்கினாள்!

[தொகுதரு — தொகுதியாக நிறைந்து வந்த. வகிர்மதி — பிறைச் சந்திரன். ஆலி — நீர்த்துளி. உகுதலும் — சிந்துதலும். உற்றது என் — நேர்ந்தது என்ன? கொற்றவன் — தலைவன். நகுதலும் — சிரித்தலும். நக்கனள் — சிரித்துவிட்டாள். நாணும் — நாணமும்.]

மோகத்தின் முன் கோபம் நிற்க முடியாமல் தோற்றுப் போய்விட்டதாம். 'கோபத்தைச் செலுத்த இடமில்லையே! ஊடல் – போரில் வெற்றியில்லையே!' என்று நாணிக் கண்ணீர் வடித்தாள். அது கண்டு அவன், 'உனக்கு என்ன உடம்பு?' என்று க்ஷேமம் விசாரிப்பதுபோல் அவள் கருத்தை யறிந்தவனாய்ச் சிரித்து விடுகிறான். சிரிப்பும் 'தொத்து நோய்' தானே? அவன் சிரிக்க அவளும் சிரிக்கிறாள். அப்போது நாணமும் போய் விட்டது, கோபம் போய்ச் சேர்ந்த இடத்திற்கு!

காதலர்கள் ஒருவரை யொருவர் தழுவி நிற்கிறார்கள். காதலியின் உள்ளத்தில் ஏதோ ஒரு சந்தேகமோ, விகற்பமோ தோன்றி விட்டது. எனினும் தழுவிய கைகளை நீக்கிக் கொள்ளவில்லை, அவனது கைகளைத் தள்ளவுமில்லை. கருத்திலே தான் விலக்கி வைத்தாளாம் காதலனை. இந்தத் தழுவல் அவனுக்கு எப்படி யிருக்கிறது? 338

கைத்தலம் நீக்கிலள்,
கருத்தின் நீக்கினள்!
சித்திரம் போன்றஅச்
செயல்ஓர் தோன்றற்குச்
சத்திரம் மார்பிடைத்
தைத்த(து) ஒத்ததே!

[தோன்றற்கு-தோன்றலுக்கு, காதலனுக்கு. சத்திரம்—வேல்.]

அந்தத் தழுவுதல் சித்திரத்தைத் தழுவியது போலவே தோன்றியதாம் காதலனுக்கு. நெஞ்சோடு நெஞ்சு கலந்து கொள்ளாத தழுவல், மார்பிலே வேலாயுதம் பாய்ந்தது போலிருக்கிறதாம்.

இவளுடைய சந்தேகத்திற்கோ, மன விகற்பத்துக்கோ காரணந்தான் என்ன? மதுவா? மதியா? அல்லது மன்மதனுடைய குறும்புத்தனமா?

பி. ஸ்ரீ.

89. மன்மதனும் மதுபானம் செய்தானு?

தலைவி யொருத்தி தன் பிரிய சகியைக் கட்டியணைத்துக் கொண்டாள், வழக்கமான பிரியத்திற்கும் மேலான பிரியத்துடன். அவள் தனக்காகத் தன் அன்பனிடம் தூது போக வேண்டும் என்று வேண்டிக் கொள்வதற்குப் பீடிகைதான் இது. எனினும், அந்த வேண்டுகோள் வெளிப்படவே யில்லை, பீடிகையுடன் நின்று விட்டது. ஏன்? தலைவி ஏன் ஒன்றும் சொல்லாமல் அப்படி விம்மிக் கொண்டிருக்கிறாள்?

மெல்லியல் ஒருத்திதான்,
    விரும்பும் சேடியைப்
புல்லிய கையினள்
    'போதி தூ(து)'எனச்
சொல்லுவான் உறும், உறும்,
    நாணில் சொல்லலள்;
எல்லையில் பொழுதெலாம்
    இருந்து விம்மினாள்.

[மெல்லியல் — மெல்லிய தன்மையுடைய பெண். புல்லிய - தழுவிய. போதி - போவாய். சொல்லுவான் உறும் - சொல்ல வருவாள். நாணில் - நாணத்தினல். சொல்லலள் - சொல்ல மாட்டாள். எல்லையில் பொழுது- எல்லையில்லாத காலம்.]

'நீ தூது போ அம்மா!' என்று சொல்ல வந்தவள் நாணத்தால் அதைச் சொல்ல முடிய வில்லையாம். திரும்பவும் சொல்லத் தொடங்குவாள், திரும்பவும் நாணத்தால் சொல்ல மாட்டாள்! இவ்விதமாகப் பயனின்றி முயன்று முயன்று, தயங்கித் தயங்கி நெடுநேரம் தோழியைத் தழுவியபடியே நின்று கொண்டிருக்கிறாளாம்.

• • •

"நீதான் என் உயிர், உன்னை யன்றி வேறு ஓர் உயிரும் உண்டோ?" என்று சொல்லிக் கொண்டிருந்தவன் பிழை செய்தான் என்றால், காதலி

யால் பொறுக்க முடியுமா? 'சுவரோடாயினும் சொல்லி ஆறு!' என்று சொல்வதுண்டல்லவா? தலைவி வேறொருத்தியிடம் காதலன் செயலைச் சொல்லப் போனாள். வேறு வேறு பேச்சுகள் எத்தனையோ பேசிக் கொண்டிருந்தாள். ஆனால், உத்தேசித்த வார்த்தையை மட்டும் சொல்லவில்லையாம்; சொல்ல முடியவில்லையாம். இதற்கும் நாணந்தான் காரணம்.

ஊறுபே ரன்பினள்
ஒருத்தி, தன்உயிர்
மாறிலாக் காதலன்
செயலை, மற்றொரு
நாறுபூங் கோதைபால்
340 நவில, நாணுவாள்,
வேறுவே(று) உளசில
மொழிவிளம் பினள்.

[ஊறு பேர் அன்பினள் — மேலும் மேலும் ஊறிக் கொண்டிருக்கும் பேரன்பையுடையவள். உயிர் மாறிலா — வேறோர் உயிரைப் பெறாத. நாறுபூங்கோதை — நறுமணம் வீசும் பூமாலை யணிந்தவள். நவில — சொல்ல.]

• • • •

"என் ராஜா வருவார்! சரியான பாடம் கற்பிக்கவேணும். சரணாகதி தவிர வேறு நிபந்தனை கிடையாது!" என்று தனக்குள் தானே சொல்லிக் கொண்டிருந்தவள் தான்! — காதலன் வந்ததும் என்ன செய்கிறாள்?

வெதிர்பொரு தோளினள்
ஒருத்தி, வேந்தன்வந்(து)
எதிர்தலும், தன்மனம்
எழுந்து முன்செல,
341 மதிமுகம் கதுமென
வணங்கி னாள்; அது
புதுமையா தலின்அவற்(கு)
அச்சம் பூத்ததே!

[வெதிர் பொரு — மூங்கிலை ஒத்த. கதுமென — விரைவாக. அவற்கு — அவனுக்கு.]

காதலனைக் கண்டதும் காதலியின் சங்கற்பம் எல்லாம் தவிடு பொடியாகிறது,- அனற் குண்டுக்கு எதிர்ப்படும் மாடமாளிகைகள் போலே. அவன் எதிர்ப்பட்டதும், அவனை வணங்கச் செய்வதற்கு மாறாக இவளே வணங்குகிறாள், சரணாகதி செய்துவிடுகிறாள். அவன் அதை எதிர் பார்க்கவில்லை. 'ஏதோ ரகளைதான்!' என்றே எதிர்பார்த்திருந்தான்.

எனினும் மகிழ்ச்சியடைவதற்கு மாறாக அவன் அச்சமடைகிறானாம். ஏன்? அவளுடைய இந்தச் செயல் புதுமையாதலின், 'இது என்ன? எதிர்பார்த்த ரகளைக்கும் மேலாக, எதிர் பாராத விபரீதம் ஏதாவது ஒன்று விளையப் போகிறதா?' என்ற பயம்தான்!

ஒருத்தி தோழியைக் கணவனிடம் தூதனுப்பி யிருந்தாள். போனவள் னிவழியே திரும்பி வருகிறாள். அவனைச் சமாதானப்படுத்த முடியவில் யோ, அல்லது அவன் பின்னால் வருவானோ? — தெரியாது. ஆனால், ந்தத் தோழியை இந்தத் தலைவி எப்படிப் பார்க்கிறாள்? தோழியாகவே ர்க்க வில்லையாம்.

தனிவரு தோழியும்
தாயை ஒத்தனள்,
இனியபூந் தென்றலும் 342
இரவும் என்னவே!

தோழி இப்போது தாயாகவும் நோயாகவும் (அதாவது, நோய் செய்யும் தென்றலாகவும்) தோன்றுகிறாளாம்.

* * *

வேறொருத்தி தூது போக்கிய பின் என்ன செய்கிறாள் தெரியுமா? வழிமேல் விழிவைத்து நின்று கொண் டிருக்கிறாள்; பக்கத்தில் நிற்பவர்கள் ஏதேதோ பேசிக் கொள்கிறார்கள் என்றுதான் தெரிகிறதே ஒழிய, அவர் கள் சொல்வது இன்னதென்றே புரிந்து கொள்ள முடியாமல் நிற்கி றாளாம். காரணம்? போக்கிய தூதோடு புத்தியையும் (உணர்வையும்) போக்கி விட்டாள்:

நோக்கினள் நின்றனள்,
நுவன்ற(து) ஓர்கிலாள்,
போக்கின தூதினோ(டு) 343
உணர்வும் போக்கினள்.



[நவன்றது - சொன்னது. ஓர்விலாள் - அறியும் வல்லமை யற்ற
வானுன்.]

* • *

இந்தக் காதலர்களுக்குக் காதல் வெறி போதாதா, கள் வெறியும் வேண்டுமோ? இவர்களுக்குத்தான் கள் வெறியா? இவர்களிடையே இவ்வளவு களிப்புக் கொண்டு திரியும் காதற்கடவுளான அந்த மன்மதனுக்கும்தான் கள் வெறி ஏறிவிட்டது! — என்று சித்தாந்தம் செய்கிறான் கவிஞன். எப்படி?

கனம்கனம் இடையிடைக்
　　களிக்கும்; கள்வனுய்
மனங்களின் நுழைந்(து)
　　　　　　அவர்
344 　மாந்து தேறலை
அனங்கனும் அருந்தினன்
　　ஆதல் வேண்டுமால்!

[கனம் கனம் - மிகவும் அதிகமாக. மாந்து - பருகின. தேறல் - தெளிந்த மது. அனங்கன் - மன்மதன்.]

"கள்ளுண்ணும் காதலர்களின் உள்ளத்தில் இருப்பதால், காதற்கடவுளும் திருட்டுத்தனமாக 'அமிர்தபானம்' செய்து விட்டான்: இல்லாவிட்டால் அவனுக்குத்தான் ஏன் இந்த வெறி?" என்பது பொருள்.

* * *

இப்படியெல்லாம் வழியிலே இளைப்பாறியபின் தசரத சக்கரவர்த்தியின் சேனை பறபடியம் புறப்படுகிறது மிதிலை நோக்கி. இந்த 'யாத்திரா மார்க்க'க் காட்சிகளெல்லாம் ஒரு புதுமைப் பதிப்பில் 'உண்மையான கம்பன் பாடல்கள் அல்ல' என்று விடப்பட்டிருக்கின்றன. இவை பழைய ஏடுகளில் காணப்படுகின்றன;' உண்மையான, அழகான கம்பன் கவிதை என்பதில் சந்தேக மில்லை.

ஸ்ரீ ராமாயணம்

பி. ஸ்ரீ.

90. சந்திப்பு

[illegible] காட்சிகளை அனுபவித்துக் கொண்டும், பூக் கொய்து நீராடி [illegible]டும், மதுவையும் காதல் - மதுவையும் பருகி வெறி கொ[illegible] சேனை சமுத்திரம் மறுபடியும் பிரயாணமாகி விட்டது. [illegible] சூரியன் உதயமாக, சேனையுடன் சக்ரவர்த்தி புறப்பட்டு [illegible] அடைகிறான்.

தசரதன் வந்து சேர்ந்த[illegible] ஜனகன் சூரியனை எதிர்கொள்ளும் சந்திரனைப் போலப் புறப்பட்டு வருகிறான்.

> வந்தனன் அரசன் என்ன,
>   மனத்தெழும் உவகை பொங்க,
> கந்தடு களிறும் தேரும்
>   கலினமாக் கடலும் சூழச்,
> சந்திரன் இரவி தன்னைச்
>   சார்வதோர் தன்மை தோன்ற,
> இந்திர திருவன் தன்னை
>   எதிர்கொள்வான் எழுந்து வந்தான்.

[கந்தடு—கந்து அடு—கட்டுத் தறியை முறிக்கும். களிறு—யானை. கலினம் — கடிவாளம். மா — குதிரை. இரவி—சூரியன். இந்திர திருவன் — தேவேந்திர சம்பத்தையுடைய நரேந்திரனாகிய தசரதன்.]

சந்திர குலத்தைச் சேர்ந்த ஜனகன் சூரியகுலத் தசரதனை வரவேற்கப் புறப்பட்டதை,

> சந்திரன் இரவி தன்னைச்
>   சார்வதோர் தன்மை தோன்ற

என்று வருணிப்பது எவ்வளவு பொருத்தமானது! இந்த உவமையில் தசரத சக்ரவர்த்தியின் உயர்வும் குறிப்பாக உணர்த்தப்படுகிறது. இந்தத் தேவேந்திர சம்பத்துக்குமுன் ஜனகனுடைய வைபவமும் ஒடுங்கித் தோன்றும் என்பதும் குறிப்பு.

ஜனகனுடைய சேனை பரிவாரங்கள் பாற்கடல் பொங்கி வருவதுபோல வருகின்றனவாம். தசரதன் சேனையோ பாற்கடல் தவிர மற்ற எல்லாக் கடல்களும் ஒருங்கே திரண்டு வந்தாற்போல் வருகின்றனவாம் :

கங்கைநீர் நாடன் சேனை,
 மற்றுள கடல்கள் எல்லாம்
சங்கினம் ஆர்ப்ப வந்து
 சார்வன போலச் சாரப்,
346 பங்கயத்(து) அணங்கைத் தந்த
 பாற்கடல் எதிர்வ தேபோல்,
மங்கையைப் பயந்த மன்னன்
 வளநகர் வந்த தன்றே.

[கங்கை நீர் நாடன் — தசரதன். ஆர்ப்ப — ஆரவாரிக்க. சார — அடைய. பங்கயத்து அணங்கு — தாமரையில் வாழும் லக்ஷ்மி. மங்கை — (இங்கே) சீதை.]

மாப்பிள்ளை வீட்டாரும் பெண் வீட்டாரும் எதிர்ப்படுவதை ரஸமாக வருணிக்கும் பாட்டு இது. இதிலுள்ள உவமை தசரத சேனா சமுத்திரத்தின் மிகுதியை வற்புறுத்துவதோடு, ஜனகனுடைய மிதிலா நகர ஜனசமூகத்தின் சிறப்பையும் எடுத்துக் காட்டுகிறது.

தசரத சம்பத்தும் சேனா சமுத்திரத்தின் பெருக்கும், ஜனக சம்பத்தையும் மிதிலையின் ஜன சமூகப் பெருக்கையும் வென்று விடுகின்றன என்பது உண்மைதான். எனினும் சீதாலட்சுமி தோன்றிய பாற்கடல் அல்லவா மிதிலா பட்டணம்! மகாலட்சுமி பிறந்த பாற்கடலுக்கு ஈடாகுமா மற்ற மகாசமுத்திரங்களெல்லாம், ஒருங்கே திரண்டு வந்தபோதிலும் ?

சம்பந்திகளின் சந்திப்பு எவ்வளவு உத்ஸாக ஆரவாரத்தைப் பரிவாரங்களுக்கிடையே உண்டாக்கி யிருக்க வேண்டும்!

* * * *

ஜனகன் தன் சேனையைப் பின்னே நிற்கச் செய்து, தசரதன் தேர் முன்னே தன் தேரிலிருந்தும் இறங்கி வந்தான். வந்து சக்ரவர்த்தி விரும்பிய வண்ணமே அவன் தேரில் ஏறிக் கொண்டான். உடனே தசரதன் அவனை அகமும் முகமும் ஒருங்கே மலரத் தழுவிக் கொண்டான் :

எய்தவத்(து) இருநெடும்
 தேர் இழிந்(து), இனியதன்
மொய்கொள்திண் சேனைபின்
 நிற்க,முன் சேறலும்,
347 கையின்வந்(து) ஏறெனக்
 கடிதின்வந்(து) ஏறினன் ;
ஐயனும் முகமலர்ந்(து)
 அகமுறத் தழுவினன்.

[எய்த — அடைய. இரு நெடும் — மிகப் பெரிய. இழிந்து — இறங்கி. மொய் — நெருக்கம். திண் — வலிய. சேறலும் — சென்ற அளவிலே. கடிதின் — விரைவாக.]

ஜனகன் [தஎ. தருக்கு எதிரே
ந்ததும், தசர தன் கையை
முன்னே நீட்டி னைப் பிடித்துத்
ன் தேரில் படி சொல்லி
வனை ஆலி
னம் செய்து
கொண்டு க்ஷேம
விசாரிக்கிறான்.
பின் இருவரும்
மிதிலை நோக்கி
போகிறார்கள்.

* *

ராம லக்ஷ்மணர்களும் மிதிலையிலிருந்து புறப்பட்டுத் தந்தையை எதிர்கொள்ள வருகிறார்கள். ராமன் தசரதனைச் சந்தித்த அந்தச் சிறப்பையும் அழகையும், தசரதனுடைய ஆவலையும் என்னென்று சொல்வது? கவிஞன் தான் அந்தச் சந்திப்பை அப்படியே கண்முன் காட்ட வேண்டும்:



காவியும் குவளையும்
கடிகொள்கா யாவும்ஒத்(து),
ஓவியம் சுவைகெடப்
பொலிவதோர் உருவொடே
தேவரும் தொழுகழல்—
சிறுவன், முன் பிரிவதோர்
ஆவிவந் தென்னவந்(து)
அரசன்மா டணுகினான்.

[காவி—நீலோற்பல மலர். குவளை—கருங்குவளை. கடி—வாசனை. காயா—காயாம்பூ. கழல்—திருவடி. மாடு—இடம்.]

தந்தையிடம் வந்து சேர்ந்த அருமைத் திருமகனின் அருமைத் திருமேனியைச் சிறப்பித்துக் காட்டுவதற்கே பாட்டின் ஒரு பாதியும் போதாதென்று மூன்றும் அடியிலும் 'தேவரும் தொழுகழல் — சிறவன்' என்கிறான். நீல மலர்களை யெல்லாம் நினைப்பூட்டும் அந்த மேனியைப் பார்த்தவர்களுக்கு, ஓவிய நிபுணர்கள் தங்கள் மேதா விலாசம் தோன்ற மிக மிக அழகியதாய்ச் சித்திரிக்கக் கூடிய எந்தச் சித்திர வடிவத்தைப் பார்த்தாலும் கூட, 'அந்த இயற்கைச் சௌந்தரியமெங்கே? இந்தச் சித்திரமெங்கே? இதில் சுவையில்லையே!' என்று சொல்லத் தோன்றுமாம்.

இத்தகைய தெய்வீக சௌந்தரியத்தோடு கூடிய சிறுவன் சமீபமாக வந்ததும், தசரதனுக்கு எப்படி இருந்தது? முன்னே (விசுவாமித்திரனிடம் அடைக்கலமாக ஒப்பித்த நாளில்) பிரிந்து போன உயிர் திரும்பி வந்து சேர்ந்தாற்போலிருந்ததாம். இது வரை ஆவி பிரிந்த கூடுபோலிருந்தது சக்ரவர்த்தியின் திருமேனி என்பது குறிப்பு.

விசுவாமித்திரரோடு புறப்பட்ட ராமலக்ஷ்மணர், 'ஐயனும், — மன்னன் இன்னுயிர் வழிக்கொண்டாலெனப்' பிரயாணப் பட்டார்கள் என்று முன்னமே (கையடைப் படலத்தில்) வருணித்ததை இப்போது ஞாபகப் படுத்திக் கொள்ள வேண்டும். "கவிஞனுக்குத் தான் என்ன ஞாபக சக்தி? என்ன நினைவாற்றல்?" என்று அதிசயிக்கிறீர்களல்லவா? இது ஞாபகத்திறம் மட்டுமன்று, கவிச் சிற்பத்திறம் என்று சொல்ல வேண்டும்.